முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S. No. 69/2018

2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் நாள் சனிக்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணக்குமார், Bench Clerk Gr-I அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ரமேஷ் | தொழில் | : | |
| த/பெ.<br>க/பெ. | : | | வட்டம் | : | |
| வயது | : | | கிராமம் | : | |
| ஜாதி | : | | மதம் | : | |

DW2

முதல் விசாரணை

பிரதிவாதி என்னுடைய தகப்பனார். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் கால் டேக்ஷி தொழில் செய்து வருகிறேன். ஃபாஸ்ட் டேக்ஷி என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். ஏற்கனவே தில்லை நகரில் நடத்தி வந்தேன். தற்போது நடத்துவதில்லை. இந்த வழக்கு எதற்காக போடப்பட்டுள்ளது என்று தெரியும். மேற்படி வழக்கு சொத்தின் விவரங்கள் தெரியும். வழக்கின் சொத்து எனது தந்தையின் வீடு. என் தகப்பனார் 2013 ல் கடன் வாங்கியுள்ளார். ராஜா (எ) பாடாலீஸ்வரன் மற்றும் ஜமீல் என்பவர் மூலமாக அம்மன் பைனான்ஸ் நிறுவனத்தில் இருந்து கடன் வாங்கினார். என் தகப்பனாருக்கு மேற்சொன்ன பைனான்ஸ் நிறுவனத்தை நேரடியாக தெரியாது. என் தகப்பனார் ரூ. 20,00,000/- கடன் வாங்கியுள்ளார். கால் டேக்ஷி தொழிலுக்கு முன்பு 2010 முதல் 2012 வரை துபாயில் வேலை பார்த்தேன். துபாயில் வெல்டிங் நிறுவனத்தில் சூப்பர்வைசராக வேலை பார்த்தேன். அங்கு மாத சம்பளம் ரூ. 45,000/- வாங்கினேன். சம்பள பணத்தை என் தகப்பனாருக்கு அனுப்புவேன். 100 ரூபாய் வெற்று முத்திரைத்தாளிலும், வெற்று பச்சை காகிதத்திலும் கையெழுத்து இட்டு என் தகப்பனார் அந்த பைனான்ஸ்க்கு

கொடுத்தார். கால் டாக்ஷி தொழில் செய்வதற்காக கடன் வாங்கப்பட்டது. 2013 ல் இருந்து என் பெயரில் வங்கி கணக்கு உள்ளது. கடன் வாங்கிய 3 மாதத்தில் அந்த பைனான்ஸ்க்கு திருப்பி செலுத்தப்பட்டுவிட்டது. ரூ. 22,00,000/- செலுத்தினோம். காருக்காக வங்கியில் கடன் வாங்கினேன். என் பெயரில் கடன் வாங்கினேன். கடன் தொகையை திருப்பி செலுத்திய பிறகு நாங்கள் கொடுத்திருந்த அசல் ஆவணங்கள் திரும்ப வாங்கவில்லை. ஏன் வாங்கவில்லை என்றால் 2 நாட்கள் கழித்து தருவதாக சொன்னார்கள். 2 நாட்கள் கழித்து வாங்கப்பட்டதா என்றால் என் தகப்பனார் வெளியூரில் இருந்தார். ஜமீல் மற்றும் ராஜா (எ) பாடாலீஸ்வரன் இருவரும் சென்று அந்த அசல் ஆவணங்களை வாங்கினார்கள். ராஜா (எ) பாடாலீஸ்வரனோடு என் தகப்பனாருக்கு 25 வருட பழக்கம். என் தகப்பனார் தொலைபேசியின் மூலம் சொன்னதன் பேரில் மேற்சொன்ன இருவரும் அம்மன் பைனான்ஸ் ஸ்ரீனிவாசனிடம் இருந்து ஆவணங்களை வாங்கினார். மேற்சொன்ன இருவரும் என் தகப்பனாரிடம் அந்த அசல் ஆவணங்களை கொடுக்கவில்லை. அந்த அசல் ஆவணங்களை திரும்ப பெறுவதற்கு நாங்கள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தோம். அந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. இது சம்மந்தமாக எங்களுக்கும் மேற்சொன்ன இருவருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. மேற்சொன்ன இருவரும் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அசல் ஆவணங்களை கேட்பதற்காக நானும், என் நண்பரும் சென்றோம். நாங்கள் அடித்துவிட்டதாக புகார் கொடுத்தார்கள். மேற்சொன்ன விசயங்கள் என் தகப்பனார் சொல்லி தெரியும்.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)